# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 1 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 8

AUGUST 2017 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே!

உங்கள் யாவருக்கும் சமாதானம் உண்டாவதாக.

இந்த மாதம் இந்தியர் யாவரும் இந்தியா சுதந்திரம் பெற்றதை வருடா வருடம் நினைவு கூறுகிறாம்.

இதே மாதத்தில் சுதந்திரம் பெற்ற **இலங்கை வாழ் மக்களும்** இதே மாதம் தாங்கள் பெற்ற சுதந்திரத்தை நினைவுகூர்ந்து தேசபக்தியோடு நாட்டுக்காக, சுதந்திரம் பெற்றுத்தந்த தேச தலைவர்களுக்காக தெய்வத்தை துதித்து ஜெபிக்கவேண்டியது அவசியம். கிறிஸ்தவர்களாகிய நாம் யாவரும் அவரவர் தேசத்துக்காக தேவனை துதிக்க கடமைப்பட்டுள்ளோம். துதிப்போம். ஜெபிப்போம்.

## இந்தியாவில் கிறிஸ்தவர்களின் நிலை

இந்தியாவில் பிறந்து வளர்ந்த இந்திய **மண்ணின் மைந்தர்களாகிய** நாம் குறிப்பாக இந்தியாவில் வாழும் **கிறிஸ்தவர்கள்** பெரிய ஆபத்தை நோக்கி போய்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. பன்முக கலாச்சாரமும், பல்வேறு தெய்வ வழிபாடுகளும் நிறைந்த இந்த இந்தியாவில் இப்போதைய ஆளும்கட்சியின் பின்னால் இருந்து செயல்படும் RSS என்ற **இந்துமத தீவிரவாதிகள்** இந்திய **மக்களின் சமாதானத்தையும்**,ஒற்றுமையையும் **சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள். பஜ்ரங்தள், இந்து சமாஜம், பசு பாதுகாவலர்கள்** என்ற பெயரில் இந்துமத தீவிரவாதிகள் நம் இந்திய தேசத்தை தங்கள் இஷ்டத்துக்கு இயக்கி சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

***வாழ்க இந்தியா! வளர்க இந்தியா ! ஜெய்ஹிந்த் !***



இம்மாதம் **இந்தியா சுதந்திரம் பெற்ற நாளை நினைவு கூறுகிறோம்.** ஒவ்வொரு வருடமும் இந்த மாதத்தில் கொடியேற்றி நினைவு கூருகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாமும் சுதந்திரம் பெற்றுத்தர பாடுபட்ட தலைவர்களுக்காக தெய்வத்தை துதிப்போம். நாம் யாவரும் இந்தியர்கள் என்பதில் இந்தியர்களாகிய நாம் பெருமைக்கொள்கிறோம்.

# AUGUST 2017

பிரிட்டீஷ்காரர்கள் **நடு இரவில்** நம் இந்திய நாட்டுக்கு **சுதந்திரம்** அளித்து, நம்மை நாமே ஆளும் உரிமையை நமக்கு கொடுத்து சென்றார்கள். ஆனால் நாமோ இன்னும் **விடியலை** காணவில்லை. இந்தியாவுக்கு இன்னும் சுதந்திர **பொழுது விடியவில்லை** என்கிறேன். இன்னும் நாம் சுதந்திரத்தை தேடும் நிலையில்தான் நாம் இருக்கிறோம்.

■ இப்போதைய BJP ஆட்சியில் நம் இந்திய தேசத்தில் நாம் இஷ்டம்போல சாப்பிடகூட சுதந்திரம் இல்லை!. நாம் என்ன **சாப்பிடவேண்டும்** ! என்ன **சாப்பிடக்கூடாது** ! என்பதை இந்தியாவை ஆளும் BJP அரசாங்கம் தான் தீர்மானிக்கிறது. **மாட்டு இறைச்சி** சாப்பிடக்கூடாது, **இறைச்சி கடைகளுக்கு** அரசாங்க அனுமதி வேண்டுமாம். இறைச்சி சாப்பிட்டால் கொலை, இப்படி உலகத்தில் எந்த நாட்டிலாவது கேட்டதுண்டா! இறைச்சி சாப்பிடுபவர்களை குறிவைத்து தாக்கி இதுவரை 124 பேர் வட இந்தியாவில் பல்வேறு இடங்களில் கொலை செய்யப்பட்டதாக செய்திகள் கூறுகிறது.

■ 2017 ஜுன்மாதம் 26ம் தேதி **இஸ்லாமியர்களின்** முக்கிய பண்டிகையான **ரம்ஜான்** அன்று **டெல்லியிலிருந்து மதுரா** பயணிகள் ரயில் **ரோக்கிலா** என்ற ரயில்நிலையத்தில் நின்றது. ஒரு கும்பல் ரயில் பெட்டியில் ஏறி ஐந்து இஸ்லாமிய மத வாலிபர்கள்,சிறுவர்களை பயங்கர ஆயுதத்தால் தாக்கினார்கள். அதில் **ஜுனைத்** என்ற சிறுவன் கொலை செய்யப்பட்டு ஸ்டேஷனில் வீசப்பட்டான். வண்டியில் இருந்த மக்கள் இந்த படுகொலைப்பற்றி விசாரித்தபோது அந்த கும்பல் கூறிய பதில் என்ன தெரியுமா?. இவர்கள் எல்லாம் இறைச்சி சாப்பிடுபவர்கள் அதுவும் **மாட்டிறைச்சி** சாப்பிடுபவர்கள் என்பதால் இவர்களைத் தாக்கினோம். **ஜெய்கோ மாதா!** என்று கூறிவிட்டு இறங்கி சென்றார்கள். மாடுகளைக் காப்பாற்ற மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள். அன்று அந்த சிறுவர்களின் சொந்த ஊரில அந்த கிராமமே **ரம்ஜான்** பண்டிகையை நிறுத்தி **கருப்பு துணி** அணிந்து தங்களுடைய துக்கத்தை தெரிவித்தார்கள். அந்த சிறுவர்கள் ரம்ஜானுக்கு உடுத்த டெல்லியிலிருந்து வாங்கின புதிய சட்டை குல்லாய் எல்லாம் இரத்த கறை. அந்த பிள்ளைகளின் ஊரான **பாரிபாத்** அருகில் உள்ள **கந்தாவலி** என்ற கிராமம் முழுவதும் சோகமும்,கண்ணீரும் நிறைந்திருந்தது.

■ இந்த கொடூரகொலை செய்தவர்கள் **பசுபாதுகாலவர்கள், பெண்கள் பாதுகாவலர்கள், இந்திய கலாச்சார பாதுகாவலர்கள்** என்ற பெயருடன் திரியும் **ரௌடிகள்** ஆகும்.

■ **உ.பி. மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில்** வியாதியால் ஒரு மாடு இறந்துபோனது. உடனே ஒரு கூட்டம் அந்த வீட்டாரை தாக்கி வீட்டை தீயினால் எரித்து குடும்ப தலைவனையும் கொலை செய்தார்கள். அப்பாவி கிராம மக்களின் மாடு வியாதிபட்டு இறந்தது ஒரு குற்றமா? எங்கே சுதந்திரம் ?


இதற்கு **பாரத பிரதமர்** அவர்கள்தான் காரணம். சாப்பிடுவதற்காக எந்த **மாட்டையும் வெட்டக்கூடாது, மாடுகளை இறைச்சிக்காக விற்கக்கூடாது** என்ற முட்டாள்தனமாக சட்டம் இயற்றியதுதான் காரணமாகும். நாம் என்ன சாப்பிட வேண்டும் என்று கட்டளையிட **இவர்கள் யார்?. இஸ்லாமியர்** குறிப்பாக **கேரளமாநிலம்** முழுவதும் உள்ள **கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும்** சாப்பிடும் தினசரி ஆகாரம் மாட்டிறைச்சியும் மீனுமாகும். அதை எப்படி இவர்கள் தடுக்கலாம !

## பாரத பிரதமர் மோடி அவர்களின் துக்கம்:

**போர்ச்சுக்கல்** நாட்டில் **காட்டு தீயில்** உயிர்இழந்தவர்களுக்கு பாரத பிரதமர் **மோடி இரங்கல் வார்த்தைகளை** பத்திரிக்கையிலும் தனது **டிவிட்டரிலும்** அறிவித்து தன் **துக்கத்தை** அறிவித்தார். ஆனால் தன் **சொந்த தாய்நாட்டில்** நடந்த இப்படிப்பட்ட பல கொலை வெறி தாக்குதலில் **மரித்தவர்கள் யாருக்கும்** தன் அனுதாபத்தை தெரிவிக்கவில்லையே ? இந்திய மக்களின் சுதந்திரத்தை பார்த்தீர்களா? இதற்காகவா நாம் சுதந்திரம் பெற்றோம். **நாம் என்ன சாப்பிட வேண்டும்** என்பதை **அரசங்கமா தீர்மானிக்கவேண்டும்.** இறைச்சி சாப்பிட்டதற்காக கொலை செய்யும் தைரியம் இவர்களுக்கு யார் கொடுத்தது? மத சார்புள்ள கட்சியும், இயக்கமுமான **BJP அரசாங்கமும்,** RSS இயக்கமும்தான் இவர்களை கொலைசெய்ய ஊக்குவித்தது என்றால் அது மிகையாகாது. இந்த இயக்கத்தில் உள்ளவர்கள் சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு தங்களை இந்திய **கலாச்சார பாதுகாவலர்கள்** என்று பெயர் சூட்டிக்கொள்கிறார்கள். நமது பாரத தேசத்தின் நிலையை பார்த்தீர்களா?.

இந்த இயக்கங்களுக்கு இவர்கள் வணங்கும் 30 முக்கோடி தெய்வங்களில் பசுமாடு - கோமாதா தெய்வம் மீன்- மச்ச அவதாரம் எடுத்த தெய்வம், பன்றி - பூமியை குடைந்துசென்ற தெய்வமாகிறது. மயில், எலி, குரங்கு, சிங்கம் ஆகிய அனைத்து மிருகங்களும் தெய்வம் என்றால் நம் இந்தியாவை சைவம் மத நாடாக மாற்ற நினைக்கிறார்களா? வெளிநாட்டினர் இவைகளை கேள்விபட்டால் சிரிப்பார்களே ! இவர்கள் பெற்ற பிள்ளைகளும் சிரிப்பார்களே !

■ கடந்த 2017 ஜூன் மாதம் இந்தியாவில் அனைத்து பள்ளிக்கூடங்கள் திறந்து மாணவ மாணவிகளுக்கு புத்தகமும் விநியோகம் செய்யப்பட்டுவிட்டது. **புதிய பாடபுத்தகத்தை** திறந்தால் மாணவர்கள் பெரும் அதிர்ச்சியை கண்டார்கள். **திரு. மோடி** மாநிலமான **குஜராத்** மாநிலத்தில் உள்ள 9ம் வகுப்பு **மாணவர்களுக்கு** அளிக்கப்பட்ட பாட புத்தகத்தில் 16ம் பக்கத்தில் **இயேசு கிறிஸ்து ஒரு பிசாசு** என்று எழுதப்பட்ட வாசகம் இந்துமத மாணவர்களையே **அதிரவைத்தது** என்றால், **இயேசுவை தெய்வமாக** ஆராதிக்கும் **கிறிஸ்தவ பிள்ளைகளின்** மனம் எவ்வளவு வேதனைப்படும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடம் அந்த புஸ்தகத்தை காட்டினார்கள். செய்தி **தீப்போல** தேசமெங்கிலும் பரவியது. **வாட்ஸப்பிலும்,** மொபைலிலும், யூ-டியூப்பிலும் (U-Tube) **தீயாக செய்தி பரவி கிறிஸ்தவ மக்களை அதிர வைத்தது.** செய்திகள் **ரோமிலுள்ள போப்** அவர்களுக்கும். அமெரிக்க அதிபர்.**டிரம்புக்கும், இங்கிலாந்து பிரதமர்,இங்கிலாந்து ராணி** அவர்களுக்கும் செய்திகள் பரந்தது.



இந்தியாவின் **மத்திய கல்வி** அமைச்சர் தன் மந்திரி **பதவியை** இராஜினாமா செய்யவேண்டும். மேலும் அந்த **பாட புத்தகத்தை எழுதியவர்கள்**,அதை அங்கீகரித்த உயர் கல்விஅதிகாரிகள் **வேலையிலிருந்து நீக்கப்படவேண்டும்** என்று **டெல்லியிலும், குஜராத்திலும்** உள்ள கிறிஸ்தவர்கள் போர்கொடி தூக்கியுள்ளார்கள். அந்த 9ம் வகுப்பு பாட புஸ்தகத்தின் 16ம் பக்கத்தை நீக்கி, குறிப்பிட்ட வாசகத்தையும் நீக்கி புதிய தாளை ஒட்டவைக்க ஏற்பாட செய்யவேண்டும்.

இதுவே ஒர **இஸ்லாமிய** மதத்தின் தெய்வமான **அல்லாவை** சைத்தான் என்று இவர்கள் **எழுதியிருந்தால்** இந்திய நாட்டில் **இரத்த ஆறு** ஓடியிருக்கும், ஆனால் கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட போராட்டம் செய்ய முடியாதே!.

**இயேசுவின்** சொந்த ஜனமான யூதர்களும், யூத மதத்தலைவர்களுமே இயேசுவை **பிசாசின் தலைவன்** என்றார்கள். ஆனால் இயேசுவோ அவர்களிடம் வாக்குவாதம் செய்யவில்லையே!. நான் **பிசாசு** இல்லை, நான் வானத்தைம் பூமியையும் உண்டாக்கின **தெய்வம்** என்று நிரூபிக்க இயேசு எந்த முயற்சியும் செய்யவில்லையே!. இத்தனைக்கும் **இயேசு பிசாசுகளை** துரத்திக் கொண்டிருந்தவேளையில்தான் இயேசுவுக்கு இந்த அவமானம் ஏற்பட்டது. இயேசுவை தெய்வமாக ஆராதிக்கும் நாமும் அதே வழியை பின்பற்றுவதை தவிர வேறு வழியில்லை!.

**ஆனால்,** இந்திய மண்ணின் மைந்தர்களாகிய நாம் நம் வருமானத்திலிருந்து **வரி** கொடுத்திருக்கிறோம். ஓட்டுபோட்டு மந்திரிகளை ஜெயிக்க வைத்திருக்கிறோம். ஆகவே இந்தியாவில் உள்ள அனைத்து கிறிஸ்துவ சபை மக்களும் **தலைவர்களும்** நம் **எதிர்பை** அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும். நம் **எதிர்ப்பை பதிய வைக்கவேண்டுமே** ! அதற்கு நமக்கு **உரிமை** உண்டு. நாம் இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்கள் ஆகும். நம்முடைய இந்த எதிர்ப்பை அரசாங்கத்துக்கு அறிவிக்க, இதை முன்னின்று செய்யவேண்டியது யார்?, நம் CNI, CSI,Lutharan, மெதடிஸ்ட் சபைகளின் **தலைவர்கள், பிஷப்கள்** யாவரும் ஒன்றுகூடி ஊர்வலம் நடத்தி எதிர்பை தெரிவிக்க வேண்டாமா?. ஒன்றுகூடி **பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும், உச்சநீதி மன்றத்துக்கும்** தெரிவிக்கவேண்டாமா?

2017 ஜூலை மாதம் முதல்தேதி டெல்லி மாணவர்களின் புஸ்தகத்தில் Air Pollution என்று கூறுகிறதை போல Sound Pollution மூலமாக இந்திய மக்களின் மூளை நரம்புகள் பாதிக்கப்படுகிறது என்று ஒரு அறிக்கையை டெல்லியில் சமர்பித்துள்ளனர். அதில் Vaccum Horn என்று பஸ்களில், லாரிகளில் வைக்கிறார்கள். அந்த சத்தம் ஆஸ்பத்திரி அருகில் கேட்கக்கூடாது. இருதய வியாதியஸ்தருக்கு அது ஆபத்து என்று எச்சரிப்பு பலகைகளை பல ஆஸ்பத்திரிகளில் காணலாம். அந்த சத்தம்போல இஸ்லாமியர் பள்ளி வாசலில். மசூதிகளில் பாங்கு ஓதுதல் என்ற பெயரில் 5 வேளை பிரார்த்தனைக்கு மக்கள் அழைக்க ஒவ்வொரு மசூதிகளிலும் காணப்படும் கோபுரங்களில் உச்சியில் நான்கு பக்கமும் கூம்பு வடிவ ஸ்பீக்கர் வைத்திருப்பார்கள். ஏற்கனவே கூம்பு வடிவ ஸ்பீக்கர் அரசாங்கத்தால் தடைசெய்யபட்டுள்ளது. ஆனால் முகமதியர்கள் அதை நீக்கவில்லை. இப்போது அதன் வழியாக பிரார்த்தனைக்கு

அழைக்கும் அல்லஹூ அல்லா என்ற சத்தம் Sound Pollution அறிக்கையில் தடைசெய்யபடவேண்டிய சப்த அட்டவனையில் இடம் பெற்றுள்ளது. அதை பத்திரிகையில் வாசித்த முகமதியர் கூட்டமாக திரன்டு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தார்கள் அவ்வளவுதான். அரசாங்க அதிகாரி அந்த தடை சட்டத்தை வாபஸ் பெறுகிறோம் என்று அறிக்கை வெளியிட்டு அந்த மசூதி சத்தம் தடை பட்டியலில் இடம் பெற்றதற்கு மன்னிப்பும் கேட்கிறார்கள். இது எப்படி இருக்கிறது. இயேசு தெய்வத்தை பிசாசு என்று இழிவுபடுத்தியதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. **சத்த தடையை** அறிக்கை பட்டியலிருந்து நீக்கி இஸ்லாமியரிடம் மன்னிப்பும் கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் இஸ்லாமியருக்கு பயப்படுகிறது. கிறிஸ்தவர்கள் இயேசுவைபோல இருப்பார்கள். எதிர்த்து குரல் எழுப்பமாட்டார்கள் என்று நம்புகிறது.

## தென்இந்திய திருச்சபை CSI & CNI

ஆனால் தென்இந்திய CSI பிஷப்மார் தங்கள் எதிர்ப்பை காட்டமாட்டார்கள். காரணம் CSI சபைகளின் **சொத்து** ஊழல், **பண ஊழல்** இவைகளில் இவர்கள் அகப்பட்டு **வருமானவரி அதிகாரியின்** பரிசோதனை வளையத்துக்குள் **அகப்பட்டுள்ளார்கள்.** CSIன் குடுமி இப்போது திரு.**மோடி** அவர்களின் **கையில் இருக்கிறது. இயேசுவை பிசாசு** என்று எழுதியதற்கும் அதுவும் அந்த குறிப்பிட்ட சம்பவம் மோடி அவர்களின் சொந்த மாநிலத்தில் நடந்தற்க்கும். இப்படிப்பட்ட இந்த மதபிரச்சனையை CSI **எதிர்த்தால்** தங்களுக்கும் CSI முழுவதற்கும் வருமான வரி ஆபத்தும் தங்கள் **மாடரேட்டர்.பிஷப் என்ற பதவிக்கு ஆபத்தும்** வரும் என்று மௌனமாகத்தான் இருப்பார்கள்! சபை மக்களை திருப்திப்படுத்த நம் பிஷப்மார்கள் தங்கள் டையோசிஸ் அலுவலகத்தில் இருந்தவாரே, தங்கள் டையோசிஸ் மாத பத்திரிகையில் இதை இந்த குறிப்பிட்ட செயலை நாங்கள் வன்மையாக கணடிக்கிறோம் என்று **ஒரே ஒரு வரி** எழுதி முடித்துவிடுவார்கள்.

### இஸ்லாமியர்கள் vs கிறிஸ்தவர்கள் :

CSIஐபோல் நம்முடைய சிறுபான்மை இனமான **இஸ்லாமியர்களும்** சிறுபான்மையினர்தான் ஆனால் சிறுபான்மையினரான **கிறிஸ்தவர்களுக்கு** ஆதரவாக **தங்கள் எதிர்பை** இஸ்லாமியர் தெரிவிக்கமாட்டார்கள், காரணம் **இஸ்லாமியர்களுக்கு** முதல் எதிரி **இந்து** மதத்தினர் அல்ல! கிறிஸ்தவர்கள்தான் இஸ்லாமியரின் **முதல் எதிரி** ஆகும். ஆகவே அவர்கள் இந்த சம்பவத்திற்காக சந்தோஷப்படுவார்கள். இயேசுவை **சைத்தான்** என்று வர்ணித்த பிரச்சனையில் அவர்கள் தலையிடமாட்டார்கள்.

### இந்த விஷயத்தில் பெந்தேகோஸ்தே சபையினர நிலை என்ன ?

**பெந்தேகோஸ்தே** சபையினர் குண்டுசட்டியில் குதிரை ஓட்டுபவர்கள். நிச்சயமாக இது அவர்களுக்கு சம்மந்தமில்லாத விஷயம். **ஸ்தோத்திரம்,அல்லேலுயா** என்று கூறி அன்னிய பாஷை பேசி முடித்து விடுவார்கள்.

**கத்தோலிக்க சபையினர ரோஷமுள்ளவர்கள்**

இப்படிப்பட்ட விஷயத்தில் **கத்தோலிக்கர் அப்படியல்ல,** அவர்களுக்கு **மேரிமாதா** முக்கியம் என்றாலும் **இயேசு கிறிஸ்துவை பிசாசு** என்று எழுதிய அரசாங்கத்தை கடுமையாக எதிர்த்து எழுதி **போப்** முதல் இந்திய **கத்தோலிக்க பிஷப்மார்** அத்தனைபேரும் ஊர்வலம் நடத்தி தங்கள் எதிர்பை காட்டினார்கள். அப்படியே பல இடத்தில் ஊர்வலம் நடத்தியதாக செய்திகள் கூறுகின்றன.

இந்த விஷயத்தை இந்திய தலை மகன் **ஜனாதிபதிக்கு** அறிவித்தாலும் பிரயோஜனம் இல்லை. நம் புதிய ஜனாதிபதி RSS பெற்ற பிள்ளையாகும் **இந்துமத வைராக்கியம்** நிறைந்தவர். அப்படிப்பட்ட அவர் ஒரு நடவடிக்கையும் எடுக்கமாட்டார். இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே 61% ஜனாதிபதியாக தெரிந்தெடுக்கபடுபவர் **RSS இயக்க தலைவர்தான்** என்பது உறுதியாகிவிட்டது. ஆகவேதான் உறுதியுடன் இதை எழுதினேன்.

## தமிழ்நாட்டு அரசாங்கம் கிறிஸ்தவ பிரச்சனைக்கு என்ன செய்யும் ?

■ தங்கள் அரசாங்கம் கலைக்கப்பட்டுவிடுமோ? வருமானவரி நடவடிக்கை தங்கள் மீது பாயுமா என்று ஒவ்வொரு மந்திரியும் M.L.A., M.P.களும் தூக்கம் வராமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் தமிழ்நாட்டில் நிர்வாகம் ஸ்தம்பித்து போயிருக்கிறது. இந்த நிலையில் கிறிஸ்தவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு தலையிட நேரமேது.

நம் தமிழ்நாட்டில்தான் MLA, MPக்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளவர்கள் ஆகும். பார்லிமெண்டில் நமக்காக பேச 40 MPக்கள் தமிழ்நாட்டுக்கு உண்டு. அதுவும் குறிப்பாக ஆளும் AIADMKக்கு உண்டு. ஆனால் **தமிழ்நாட்டு அரசாங்கமோ** BJPயிடம் **அடிமைப்பட்டுபோய்** ஜனாதிபதி தேர்தலில் தங்கள் ஓட்டை BJPக்கு போடுவதாக உறுதி செய்துவிட்டது. இவர்கள் மட்டும் ஜெயலலிதாவைபோல் BJPயை எதிர்த்திருந்தால் நிச்சயம் Mrs.MEERAKUMAR அவர்கள் **ஜனாதிபதியாகியிருப்பார்.** நம் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் நிலை அந்தரத்தில் தொங்குகிறது. இவர்களாலும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆனால் இஸ்லாமியரின் ரம்ஜான் பண்டிகைக்கு கஞ்ஜி குடிக்க போட்டிபோட்டு போட்டோவுக்கு போஸ் கொடுப்பார்கள். காரணம் ஓட்டு வங்கி என்பதாகும்.

## TV ஸ்டார் ஊழியர்கள் & பிரபல மேடை பிரசங்கிகள்

சகோ பால் தினகரன் (ஏசு அழைக்கிறார்) சகோ. மோகன் C. லாசரஸ், நாலுமாவடி, இயேசு விடுவிக்கிறார், சகோ. சாம் ஜெபதுரை, ஏஞ்சல் TV, ஆசீர்வாதம் TV,, சால்வேஷன் TV, நம்பிக்கை TV, போன்ற யாருமே **இயேசுவை பிசாசு** என்று பாட புத்தகத்தில் எழுதியதற்கு ஒன்றும் வாய் திறக்கவில்லை. தங்கள் பத்திரிக்கையில் ஒரு வரிகூட தங்கள் எதிர்ப்பை தெரிவிக்கவில்லையே? இவர்கள் வாய் திறந்து எழுதினால் இவர்கள் யாவரும் **பண விஷயத்தில்** திரு. மோடியிடம் அகப்பட்டுள்ளார்கள். ஆகவே இயேசுவை எவ்வளவு இழிவுபடுத்தினாலும் இவர்கள் ஒன்றும் பேச மாட்டார்கள். ஆனால் மேடையில் இயேசு இயேசு என்று மாய்மால கண்ணீர்விடுவார்கள் அவ்வளவே !

**ஜாமக்காரன்**

இந்த சூழ்நிலையில் **ஜாமக்காரன்** வாசகர்களாகிய நாம் என்ன செய்யவேண்டும்? அங்காங்கே **உபவாச நாட்களை** ஏற்பாடு செய்து விசுவாசிகள் அனைவரும் இணைந்து ஜெபிப்போம். அன்று எஸ்தரிடம் மொர்தேகாய் கூறியதுபோல **இந்த நேரத்தில் நீ மவுனமாக இருந்தால் இரட்சிப்பு வேறு ஒரு இடத்திலிருந்து எழும்பும். அப்போது நீயும், உன் தகப்பன் குடும்பமே அழியும்** என்று எச்சரித்தான். எஸ்தர் 4:14

## இந்திய கிறிஸ்தவர்களுக்கு மேலும் பிரச்சனை உண்டாகும்

ஜனாதிபதி RSSஆகிப்போனதால் **மத மாற்ற சட்டம்போல்**, பல தடைசட்டங்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக BJP அரசாங்கம் கொண்டு வந்தால் அதை ஆதரித்து, அந்த சட்டத்தில் **ரப்பர் ஸ்டாப்** வைக்க நம் **RSS ஜனாதிபதி** தயாராக இருக்கிறார்.

**கிறிஸ்தவ ஆலயங்கள்** தகர்ப்பு & **ஊழியர்கள் மிஷனரிகள்** தாக்கப்படுவது அதிகமாகியுள்ளது கடந்த சில மாதங்களுக்குமுன் டெல்லியில் **12 கிறிஸ்தவ சபை தலைவர்கள்** கூடி **செமினார்** நடத்தியபோது இந்து மத தீவிரவாதிகளும்,தலைவர்களும் ஆலயத்தின் உள்ளே புகுந்து **மேசை,** நாற்காலி பந்தல் **சிலுவை** அத்தனையையும் அடித்து நொருக்கி அங்கு கூடிய அத்தனை **சபை தலைவர்களையும்,ஆயர்களையும்** பிஷப்மார்களையும் விரட்டி அடித்தனர்.




எங்கே மத சுதந்திரம்?. இந்த வருட **சுதந்திர தினம்** நம் நாட்டுக்கும், நம் மக்களுக்கும் பெருத்த தலைகுனிவு. உலக மக்களும் நம் நாட்டை கவனிக்கிறார்கள். இப்படிப்பட்ட மத வெறியார்களால்தான் இந்த அவமானம் நம் நாட்டுக்கு ஏற்பட்டது. இது இந்தியாவின் பல்வேறு மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட கிறிஸ்தவ ஆலய தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. காவி கட்சியின் பெலம் கூடிக்கொண்டேயிருக்கிறது. இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடக்கும் தாக்குதலை உலகமே **U-Tube** வழியாக காண்கிறார்கள். இது உலக நாடுகளில் இந்தியாவைப்பற்றி தவறான அபிப்ராயத்தை ஏற்படுத்துமே! இந்திய தேசத்திற்காக நாம் அதிகமாக முழங்காலில் நிற்க வேண்டியது அவசியமாகிறது. எனவே ஒவ்வொரு நாளும் இந்தியாவை ஆள்பவர்களுக்காக அவசர ஜெபம் ஏறெடுப்போம்.

# நம் CSI மாடரேட்டர் என்ன செய்யப்போகிறார்?.



தமிழ்நாட்டில் தூத்துக்குடி-நாசரேத் CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப் **அபிஷேக ஆராதனை** தூத்துக்குடி மாவட்டத்தில் **நாசரேத்** என்ற ஊரில் CSI Cathedral ஆலயத்தில் மாடரேட்டர் Most Rev.Thomas K.Oommen அவர்களால் நடத்தப்பட்டது. அதை தொடர்ந்து புதிய பிஷப் Rt.Rev. **தேவ சகாயம்** அவர்களுக்கு வரவேற்பு விழா நடத்தப்பட்டது. அந்த விழா நடந்த மண்டபத்தில் கெமிக்கல்மணல் **வியாபாரிகள்,** பெரிய பெரிய **பணக்காரர்கள்,** AIADMK ஜெயலலிதா பார்ட்டி **MLAக்களும்,** பெரிய பிரமுகர்களும், **மாடரேட்டர்** அருகில் அமர்ந்தபடி இருந்தார்கள். அப்போது அந்த அபிஷேக ஆராதனை வரவேற்பு விழாவில் நம் **மாடரேட்டரின் பிரசங்கம்** சற்று வித்தியாசமாக இருந்தது. **அவர் பேசியதாவது :-** கிறிஸ்தவர்களாகிய நாங்கள் இந்த **இந்தியாவின் மண்ணின் மைந்தர்கள்** ஆகும். நாங்கள் ஆராதிக்கும் தெய்வம் பிரிட்டிஷ் **வெள்ளைக்கார தெய்வம் அல்ல.** இயேசுகிறிஸ்து நம் **இந்தியா தேசம்** அமைந்துள்ள **ஆசியாவில்தான்** பிறந்தார். ஆகவே **இந்திய கிறிஸ்தவர்**களாகிய எங்களுக்கு அந்த **இயேசு** தெய்வத்தை **ஆராதிக்கவும், அறிவிக்கவும்** எங்களுக்கு **உரிமை உண்டு** என்று உணர்ச்சிவசப்பட்டு பேசினார். புதிய பிஷப் வரவேற்பு பிரசங்கத்துக்கு ஏன் இயேசுவை ஆராதிக்கும் இந்திய உரிமையைப்பற்றி பேசினார்?. என்று பலர் பேசிக்கொண்டார்கள் வந்திருந்த அத்தனை பத்திரிகை நிருபர்களும் அவர் பிரசங்கத்தை குறித்துக்கொண்டனர். ஆனால் யாரும் மாடரேட்டர் பிரசங்கத்தை வெளியிடவில்லை. பிரதமர் மோடி அவர்களுக்கு பத்திரிகை நிரூபர்களும் பயந்துக் கொண்டிருக்கிறார்கள்.

CDல் மாடரேட்டரின் **அந்த செய்தியை** நான் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். மாடரேட்டர் அவர்கள் பிஷப்பாக இருக்கும்போதோ, **ஆயராக** பணியாற்றும்போதோ அவர் பிரசங்கத்தை நான் கேட்டதில்லை. முதன்முதலாக கேட்ட அந்த செய்திக்காக தேவனை துதித்தேன்.

## என்ன நடவடிக்கை எடுக்க போகிறார்

சரி, இப்போது பிரச்சனை என்னவென்றால், **இயேசுகிறிஸ்து ஒரு பிசாசு** என்று பிரதமர் மோடியின் மாநிலமான குஜராத்தில் பள்ளிக்கூடத்தில் 9ம் வகுப்பு பாடபுத்தகத்தில் எழுதப்பட்ட அந்த **தெய்வ தூஷணத்துக்கு** CSI மாடரேட்டர் தான் வகிக்கும் அந்த உயர்ந்த பதவிமூலம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்? என்பதுதான் தமிழ்நாட்டில் அன்று நாசரேத்தில் அவர் ஆற்றிய பிரசங்கத்தை கேட்ட CSI சபை மக்களின் கேள்வி ஆகும். அவர் கண்டிப்பாக பிரதமருக்கு CSI சார்பில் தன் எதிர்ப்பை தெரிவித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக நாம் யாவரும் அவரை ஜெபத்தில் தாங்குவோம்.

இனிவரும் நாளிலாவது நாம் இரவில்பெற்ற **நம் தேச சுதந்திரத்தின்** சந்தோஷத்தை **சூரியன்** உதிக்கும்போது காண்போமா?. ஜெபிப்போம்.

கர்த்தரின் பணியில்

**டாக்டர் புஷ்பராஜ்**

# சபைகளிடம் ஜாக்கிறதையாக இருங்கள்

கடைசி காலங்கள் உபதேச குழப்பங்கள் பெருகிவிட்டன. **அன்னிய பாஷையைப்**போல பல தவறான உபதேசங்களை பிசாசு கள்ளத்தனமாக **சபைக்குள்** திணிக்க முயலுகிறான். CSI சபைக்குள்ளும் **துதி ஆராதனை** என்ற பெயரில் நுழைய ஆரம்பித்துவிட்டான். **துதி ஆராதனை** நடத்துவது, **ஆராதனையின்** ஆரம்பத்தில் துதிப்பது முக்கியமானதாகும். அது நம் தெய்வத்துக்கு பிடித்த பாகமாகும். ஒவ்வொரு சபைக்கும் அது அவசியம். ஆனால் சபை **பாஸ்டர்கள்,ஆயர்கள்** அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள்வைத்து **கட்டுபடுத்தாமல் போனால் அன்னிய பாஷை** என்ற போலியான சப்த அனுபவத்தை **பிசாசு** சபைக்குள் கொண்டுவந்துவிடுவான். ஜாக்கிறதை !

## யெகோவா சாட்சி சபையினருக்கு எச்சரிக்கையாயிருங்கள்...

**யெகோவா சாட்சி** சபையில் **நான்குவித கொள்கை** உடையவர்கள் இருக்கிறார்கள். இப்போது புதிய ரூபத்தில் மற்றொரு பிரிவினர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் பலரை வஞ்சித்து வருகிறார்கள். அவர்கள் **யாவே சர்ச் ஆப் ஏஷு** சபை என்று தங்களை கூறிக்கொள்கிறார்கள். இவர்கள் **யெகோவா** சாட்சி என்ற சபை பெற்றெடுத்த பிள்ளையாக இருக்கிறார்கள். ஆராதனையில்மட்டும் சில மாற்றங்களோடு இவர்கள் சபையை நடத்துகின்றனர். கர்த்தர் வேதத்தில் கூறியது **யாவே** என்று மட்டுமே அதை **யெகோவா** என்றுகூட கூறக்கூடாது என்றும் வேதத்தில் **ஈஷு** என்றுதான் எபிரேய பாஷையில் எழுதப்பட்டது. அதை **இயேசு** என்றுகூட அழைக்கக்கூடாது என்கிறார்கள், வேதத்தில் உள்ளபடிதான் அழைக்கவேண்டும்என்பது இவர்களின் கொள்கை. அதற்கு நான் அவர்களிடம் சொன்னேன் நீங்கள் கூறும் ஒழுங்கின்படி பார்த்தால் பேதுருவை **பத்ரோஸ்** என்றுதானே அழைக்கவேண்டும். எதற்கு ஆங்கிலத்தில் எழுதியதை மொழிபெயர்க்காமல் பீட்டர், ஜான், பால், ஜேம்ஸ் என்பதை தமிழில் **பேதுரு,யோவான்,**யாக்கோபு என்றும் அழைக்கப்படுகிறார்கள். அது மொழி பெயர்ப்பாளர்கள் வைத்த பெயர்தானே! என்றும் அவர்களிடம் கேட்டபோது அதற்கு அவர்களால் பதில் கூறமுடியவில்லை. இவர்களிடம் ஜாக்கிறதையாக இருங்கள். இப்படி **புதிய சபை** என்ற பெயர்களில் **யெகோவா** சாட்சிகளின் உபதேசம் கிறிஸ்தவர்களில் நுழைக்கப்படுகிறது.

## யெகோவா சாட்சி சபையை தடைசெய்த நாடு

▣ **யெகோவா சாட்சிகள்** சபையை தன் நாட்டில் இயங்காதபடி உலகத்திலேயே தடைசெய்துள்ள ஒரே நாடு **சிங்கப்பூர்** மட்டுமே. இந்த தடைக்கு காரணம் **சிங்கப்பூர்** பிரதமர் அவர்கள். நல்ல கிறிஸ்தவர் ஆகும். இப்படி நம் இந்தியாவிலும் ஆளுகிறவர்கள் சரியான தெய்வத்தை அறிந்தவர்களாக இருந்தால் நம் நாடு எத்தனையாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

## சாத்தான் சபை

▣ அடுத்தது சாத்தான் சபையை சேர்ந்தவர்களிடமும் ஜாக்கிறதையாக இருங்கள்.

**சாத்தான் சபை** தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை, (கேரளாவில்) திருச்சூர் ரயில்வே ஸ்டேசன் அருகே, திருவனந்தபுரம் இன்னும் பல மாநிலங்களில் வெகு வேகமாய் பரவி வருகிறது. இவர்களின் சபையையும் சபை அங்கத்தினரையும் நீங்கள் கண்டுபிடிப்பது கஷ்டம். ஆனால் அவர்கள் உங்களை கண்டுபிடித்துவிடுவார்கள். உங்களிடம் பேசுவார்கள். சாத்தான் செய்யும் உதவிகளைப்பற்றி உங்களிடம் புகழ்ந்து கூறுவார்கள். உங்களுக்கு தேவையான உதவியையும் **சாத்தான் மூலம்** அவர்கள் பெற்றுத்தருவார்கள் என்றாலும் அவர்கள் நடத்தும் ஆராதனைக்கு உங்களை அழைத்துசெல்ல மாட்டார்கள்.

உங்களை நன்றாக மூளைச் சலவை செய்து நாம் ஆராதிக்கும் தெய்வத்தைப்பற்றி உங்களிடம் தவறாக கூறி உங்களை ஜெபிக்காதபடி வெறுப்பேற்றிவிடுவார்கள். நீங்கள் முழுவதும் அவர்களுக்கு கீழ்அடங்கிவிட்டீர்களேயானால் அல்லது அவர்களுக்கு உங்கள்மேல் நல்ல நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அதன்பிறகு அவர்கள உங்களை தங்கள் **ஜெபகூட்டத்துக்கு** அழைத்து செல்வார்கள். (ஆம் அவர்களுக்கும் **சாத்தானிடம்** ஜெபகுறிப்பு வைத்து ஜெபிக்கும் ஜெப கூடுகை உண்டு) அதன்பின்தான் சனிக்கிழமைகளில் நடக்கும் அவர்களின் ஆராதனைக்கு அழைத்து செல்வார்கள். இந்த ஆராதனைக்கு உங்கள் கண்களை கட்டி அழைத்துசெல்வார்கள். இது 35 வருடத்துக்கு முன் சாத்தான் சபை நடந்த வீட்டின் அருகே உள்ள ரயில்வே குவாடர்ஸில் உள்ள என் ஜாமக்காரன் வாசகர் வீட்டை சந்திக்க சென்ற போது கேட்டு அறிந்த விஷயமாகும்.

ஆனால் இப்போது கம்ப்யூட்டர் யுகம். கம்ப்யூட்டர் மூலமாக பிசாசு கிறிஸ்தவ குடும்ப பையனைபோல சந்திப்பான். மெல்ல மெல்ல இன்டர்நெட் வழியாக உங்களை கம்ப்யூட்டருக்குள்ளே ஆழத்தில் அழைத்துகொண்டு போவான். அதன் வழியாக வேத பாடம் நடத்துவதுபோல ஒவ்வொரு இரவும் சாத்தான் வேதம் ஓதுவான். அதற்குமேல் நான் எழுத விரும்பவில்லை. உங்கள் பிள்ளைகளை கூடுமான வரை இரவு 10-00 மணிக்குமேல் **படுக்கைக்கு** லேப்டாப் **வாட்ஸ்அப்** மொபைல் ஆகிய சோதனை கருவிகளை எடுத்து செல்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நேரத்தோடு உறங்க சொல்லுங்கள். சாத்தான் பகலில் வாலிபர்களை சந்திக்க முயலுவதில்லை. பெண்களைவிட, **ஆண்பிள்ளைகள்தான்** சாத்தானின் கம்ப்யூட்டர் வகுப்பில் மயங்கிவிடுகிறார்கள். ஜாக்கிறதை.

## தொலைபேசி - கடிதம் - e-mail

▣ தொலைபேசியில் என்னோடு ஜெபகுறிப்புகளை பிரச்சனைகளை அறிவிப்பதைவிட கடிதம் அல்லது Email மூலம் எழுதுங்கள் என்னோடு தொலைபேசியில் பேச லைன் கிடைப்பது கடினம். ஆனால் கடிதம் அல்லது Emailல் விவரம் எழுதி உங்கள் தொலைபேசியின் எண்ணையும் எழுதி அனுப்பினால் நானே போனில் உங்களை அழைத்து விவரங்களை கேட்டு ஆலோசனை கூறி தொலை பேசியிலேயே ஜெபிக்கிறேன். அது பலருக்கு மிகவும் பலன் அளித்துள்ளது. நான் வெளி ஊருக்கு சென்றாலும் நான் தங்கும் இடத்திலிருந்து உங்கள் தொலைபேசியில் பேசி உங்களுக்காக ஜெபிப்பேன்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB) பெரியமலை கூட்டங்கள் 50வது நிறைவு ஸ்தோத்திர கூட்டம்









FMPB மிஷனரி ஸ்தாபனத்தின் 50ம்வருட ஸ்தோத்திர கூட்டம் பெரிய மலை பணித் தளத்திலேயே ஆசீர்வாதமாக நிறைவேறியது.

**முதல் மிஷனரியான** Rev. **ஹாரிஸ் ஹில்டன்** அவர்களின் பிள்ளைகளை **பெரிய மலைக்கு** வரவழைத்து கௌரவப் படுத்தினார்கள். **ஹாரிஸ் ஹில்டன்** அவருடைய வாழ்க்கை, அவருடைய சாட்சியை குறித்து பலர் பகிர்ந்துக்கொண்டனர். FMPB தலைவர்.**ஜான்சாமுவேல்**,IAS, FMPB பொது செயலர் Rev.**சுதர்சன்சாமுவேல்,** உபதலைவர் Dr.M.**எட்வர்ட்ராஜா** அவர்கள் இணைந்து 50ம் வருட பொன்விழாவை சிறப்பாக நடத்தினார்கள்.

FMPBயின் வருடாந்திர **மாநில முகாமுக்கு** மக்கள் திரள்வதைப்போல அந்த மலைமேல் சுமார் 3000 விசுவாசிகள் திறண்டது அவர்களின் மிஷனரி பாரத்தை உணர்த்தியது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தெல்லாம் குறிப்பாக **ராமநாதபுரம், சென்னை, பெங்களூர், ஓசூர், நெல்லை, நாகர்கோவில்** போன்ற மிகத் தொலைவிலிருந்து பஸ்களிலும்,வேன்களிலும்,கார்களிலும்,ரயில் வழியாகவும் மக்கள் பெரியமலைக்கு வந்து சேர்ந்தார்கள். சிலர் சில மைல் நடந்தும் வந்து சேர்ந்தார்கள். தங்கள் வீட்டு திருமணத்துக்கு உரிமையோடும், பாசத்தோடும் வருவதைப்போல் விசுவாசிகள் கால் முட்டி வேதனைகளை

பொருட்ப்படுத்தாமல் சாரைசாரையாய் மலையேறி நடந்துவந்தது கண்கொள்ளா காட்சியாக அமைந்தது. கர்த்தரின் பணியில் குறிப்பாக மிஷனரி பணியில் தங்களுக்குள்ள **பாரம்** வாஞ்சையை அவர்களின் வரவு வெளிப்படுத்தியது. **கூட்டத்தின் இறுதியில் நான் செய்தி கொடுத்தேன்.** கூட்டம் மிகவும் ஆசீர்வாதமாக முடிந்தது. கூட்டத்தில் நிகழ்ச்சிகளை யாரோ அனுபவம் இல்லாதவர்கள் நடத்தியதுபோல அமைந்ததால் மக்கள் கொஞ்சம் பொருமை இழந்ததையும் காண முடிந்தது.

சாட்சி கூறிய பலர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு பேசியதால் நிகழ்ச்சிகள் திட்டமிட்டப்படி நடக்காமல் நீண்டு போனது. மேலும் மலைஏறி நடந்துவந்த பலர் காலை ஆகாரம் சாப்பிடாமல் வந்திருந்தார்கள். மலையில் தேனீர் கூட கிடைக்காததால் பசியும், கூட சலிப்பும் இணைந்துகொண்டதால் நேரம்கூடகூட கூட்டத்தில் சிறிய சலசலப்பு ஏற்பட்டதை அறிய முடிந்தது. மேலும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியவர்களையும் மீறி பல **புதிய நிகழ்ச்சிகள்** புதிதாக புகுத்தவேண்டிய நிர்பந்தம் நிகழ்ச்சியாளர்களுக்கு ஏற்பட்டு அதை தவிர்க்க இயலாமல் போனது. பெரிய மலை கூட்டத்துக்கு வந்த பங்காளர்களுக்கு இது நிச்சயம் புது அனுபவமாக அமைந்திருக்கும்.

▣ இம்முறை நான் FMPB யின் 50வது ஆண்டு நிறைவுக்கு வர சம்மதித்ததின் முக்கிய காரணம் என் வாழ்க்கையில் ஆரம்ப மிஷனரி ஊழியத்தை நான் தொடங்கியபோது விசுவாசத்தில் எப்படி ஊழியம் செய்வது என்பதை பெரிய மலை மிஷனரி ஊழியத்தில்தான் நான் கற்றுக்கொண்டேன். அந்த விசுவாச ஊழியத்தை கற்றுக்கொடுத்த அந்த **பெரியமலையிலேயே** சென்று தேவனுக்கு நன்றி சொல்லி ஜெபிக்கவேண்டும் என்ற என் ஆசை நிறைவேறியது. **விசுவாச ஊழியத்தை** புதுப்பித்துக்கொள்ளவும் ஜூலை 9ம் தேதியில் நடந்த அந்த மலை கூட்டம் எனக்கு பேருதவியாக அமைந்தது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கி தந்த FMPB **தலைவர்** அவர்களுக்கும் FMPB **பொதுச்செயலருக்கும்** நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

## ஆசை நிறைவேறவில்லை

நானும் சகோ. ஹாரிஸ் அவர்களும் தங்கி மிஷனரி ஊழியம் அரம்பித்த அந்த பன்றிகள் தங்க வைத்த குடிசை பகுதியையும், பெரிய மலை பெட்டமுகுளம் கிராம மக்களையும் வீடுவீடாக சந்திக்கவும், 50 வருடத்தின் ஆரம்பத்தில் வாழ்ந்த அங்குள்ள முதியோர்களை, பழைய முகங்களை காணவும் ஆசைப்பட்டேன். ஆனால் அது நிறைவேறவில்லை. இருள் சூழ்வதற்குமுன் இறங்கிவிட வேண்டும் என்று அடிவாரத்திலேயே வன அதிகாரிகளும். ஓட்டலில் சந்தித்த கிராம வாசிகளும் எச்சரித்ததால் யானைகள் தண்ணீர் குடிக்க அங்குள்ள ஏரியில் கூட்டமாக வருவது வழக்கம். அவைகள் வரும் முன்பே மலையை விட்டு இறங்கிவிட்டோம். அது எனக்கு ஏற்பட்ட ஒரு மனக்குறைவாக கருதுகிறேன்.

## ஆசை நிறைவேறியது

பெரிய மலையில் நாங்கள் தங்கிய குடிசைக்கு அருகில் சகோ. P. சாமுவேல் அவர்களும். சகோ. எமில் ஜெபசிங் அவர்களும் சத்தமாக ஜெபித்தது இப்போதும் என்னால் மறக்க இயலவில்லை.

சகோ.P.சாமுவேல் அவர்கள் எப்போது ஜெபித்தாலும் **இயேசு ராஜா** என்று தான் அழைப்பார். அப்படியே ராஜா! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே ! ஆள்பவரே இந்த மலையில் **ஆலய மணி** சத்தம் கேட்க வேண்டும். அந்த சத்தத்தை கேட்டு உம்மை ஆராதிக்க மக்கள் நடந்து வருவதையும் அங்கு **தேவாலயம் கம்பீரமாக** இருப்பதை நாங்கள் கண்ணார கண்டு துதிக்கும் காலம் வரவேண்டும் என்று ஜெபித்த ஜெபம் கேட்கப்பட்டு, அதே **பெரியமலையில்** சிலுவை பொரித்த **ஒரு தேவாலயம்** எழும்பியிருப்பதை நானும் நேரில் கண்டு தேவனை துதித்தேன்.

இலவச ஆப்ரேஷன் முதல் இலவச வைத்தியம் செய்ய அருமையான ஆஸ்பத்திரி அந்த மலையில் எழும்பியுள்ளது, சம்பளம் வாங்காது ஆப்பரேஷன் செய்யும் மெத்த படித்த டாக்டர் ஒருவர் அங்கு உண்டு. அவரின் சாட்சி என்னை மெய் சிலிர்க்கவைத்தது. கர்த்தர் அந்த பெரியமலை ஆதிவாசிகளை மிகவும் நேசித்ததால்தான் இந்த கிருபையை அம்மக்கள் ஆஸ்பத்திரி மூலம் அனுபவிக்கிறார்கள். இப்போது தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர். ஒசூர் போன்ற பெரும் நகரங்களிலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட மலையின் மேலுள்ள இந்த ஆஸ்பத்திரியை மக்கள் தேடிவருகிறார்கள். கடந்த வருடம் மட்டும் 1000 பெரிய (மேஜர்) ஆப்பரேஷன்கள் அங்கு நடைபெற்றதாக டாக்டர் சாட்சி கூறும்போது என் உள்ளம் தேவனை துதித்து தோத்தரித்தது .

50 வருடத்துக்குமுன் மூங்கிலில் வியாதியஸ்தர்களை தொட்டில் கட்டி படுக்கவைத்து பல மைல் தூரம் நடந்து டெங்கினிகோட்டைக்கும், தர்மபுரிக்கும் அழுதுக்கொண்டே அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதை நான் அன்று கண்டு வேதனைப்பட்டேன். ஆனால் இன்று என்னுடைய 76 வயதில் என் மரணத்துக்குமுன் என் கண்கொண்டு இந்த காட்சிகளை காண வைத்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவனை துதிக்கிறேன். கனப்படுத்துகிறேன், மகிமைப்படுத்துகிறேன், நன்றி செலுத்துகிறேன். ஆமென் !

# வாசகர்களின் விமர்சனம்

▣ 2017 **ஜூன்** மாத ஜாமக்காரனில் வெளியிட்ட **பாஸ்டர் சகரியாபூனன்** அவர்களின் ஆங்கில செய்தி பலரை **தொட்டிருக்கிறது,** பலரை **உணர்த்தியிருக்கிறது.** அந்த செய்திக்காக நன்றி கூறி வந்த கடிதங்கள் தொலைபேசி செய்திகள் ஏராளம், அதற்காக தேவனை துதிக்கிறேன். வெளிநாட்டில் வசிக்கும் தமிழ், மலையாளம் வாசிக்க தெரியாத ஜாமக்காரன் குடும்பத்தில் உள்ளவர்களுக்காக ஆங்கில செய்தியை வெளியிடுகிறேன். தொடர்ந்தும் வெளியிடுவேன்.

▣ 2017 **ஜூலை** மாத ஜாமக்காரனில் **திரியேகத்தை** குறித்து Dr. Rev. **தியோடர் வில்லியம்ஸ்** எழுதிய கட்டுரையில் பலரின் சந்தேகத்துக்கு பதில் கிடைத்தது என்று சந்தோஷமாக கடிதம் மூலம் எழுதி குறிப்பிட்டதை வாசித்து தேவனை துதிக்கிறேன்.

!

# கிறிஸ்தவ குடும்பக் கொடூர கொலைகள்

**குறிப்பு :** இந்த கட்டுரையையும் அதோடு நல்ல ஆலோசனையும் வழங்கி எழுதியவர் மார்தாண்டம் (KK Dist) கிறிஸ்தவ கல்லூரியில் கொலை செய்யபட்ட பேராசிரியரிடம் படித்த மாணவராகும்

கேரள மாநில தலைநகரான **திருவனந்தபுரம்** நந்தங்கோடு என்ற இடத்தில் வி.ஐ.பிக்கள் மட்டும் வசிக்கும் அந்த குறிப்பிட்ட பகுதியில் **அரண்மனை**போன்ற பங்களாவில் 5-4-2017 அன்று பேராசிரியர் Prof. **ராஜதங்கம்.** பேராசிரியரின் மனைவி அரசு மருத்துவ அதிகாரி Dr. ஜீன்பத்மா அவர்களின் ஒரே மகள் **டாக்டர் கரோலின்** மற்றும் வயதான உறவினர் **லலிதா** ஆகியவர்கள் வசித்து வந்தனர்.

புரோபசர் ராஜதங்கம் - ஜீன்பத்மா அவர்களின் ஒரே மகன் ஜீன்சன் ராஜா என்ற மருத்துவ கல்லூரி மாணவன் தன் முழு குடும்பத்தையும் ஒருவர் பின் ஒருவராக கோடாரியால் கொடூரமாக துண்டு துண்டாக வெட்டி கொலை செய்துவிட்டு இரண்டாம் மாடி அறையில் பெரிய இரும்பு பேரலில் போட்டு கொன்று அவர்களை **பெட்ரோல், ஆசிட் ஆகியவைகளை** ஊற்றி அவர்களை எரித்தான். அதில் ஒரு சரீரம் சரியாக எரியாத நிலையில் அழுகி போனதால் துர்நாற்றம் வீசியது. இதனால் அருகில் குடியிருந்தவர்கள் மூலமாக காவல் துறைக்கு புகார் போனது, இந்த கொடூர கொலையை செய்தவன் பேராசிரியார் ராஜதங்கம் அவர்களின் ஒரே மகன் **கேடல் ஜீன்சன் ராஜா** என்பவராகும். இவன் யாரையும் தன்னோடு கூட்டு சேர்க்காமல் அவன் ஒருவனாக சரியாய் திட்டமிட்டு ஒருவர் பின் ஒருவராய் கொன்று மேல் மாடியில் வெட்டி டிரம்மில் போட்டு எரித்து இருக்கிறான் என்று கூறப்படுகிறது. இந்த செய்தி முழு கேரளாவையும் அதிர்ச்சியில் உறைய வைத்த சம்பவம் ஆகும்.

10 மாதம் சுமந்து வேதனையுடன் பெற்று வளர்த்திய **தன் பெற்றோரை** ஈவு இரக்கமின்றி எந்த காரணமும் இன்றி கொன்றது **கொடூரத்திலும்** கொடூரம் ஆகும். பேராசிரியர் **ராஜதங்கம்** அவர்கள் மார்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில் எனக்கு பாடம் கற்பித்துதந்த ஆசிரியர் ஆவார் என் இந்த கட்டுரையை எழுதியவர் கூறுகிறார், அவருடைய மிடுக்கான நடை, உடற்பயிற்சி மேற்கொண்ட அவருடைய கட்டுகோப்பான உடல், யாருக்கும் பயப்படாத நேர்கொண்ட பார்வை ஆகிய செயல்களையும், நடையையும் கண்டு. கல்லூரியிலே அவரை **போலீஸ்** என்று அழைக்கப்பட்டவர் அகும். மற்றும் அவர் **மதி நுட்பம்** கொண்ட பேராசிரியர் ஆகும். வகுப்பில் மாணவர்கள் மனதில் நினைப்பதை அறியக்கூடிய (Face Reading) ஆற்றல் உடையவர்.

**பணக்கார பேராசிரியர்** என அப்போதே அவர் அறியப்பட்டார்.

மாணவர்களுக்கு **நல்ல ஆலோசனை** வழங்குவதில்` முதன்மையானவர். இவருடைய மனைவி Dr. ஜீன்பத்மா மருத்துவ **மாணவர்களுக்கு, மன சாஸ்திர ரீதியாக கவுன்சிலிங்** வழங்குவதில் சிறப்பு பெற்றவர் கல்லூரியின் **டீனான** பதவி வகித்தவர். மேலும் இவர் CSI சபையை சேர்ந்த கிறிஸ்தவர் ஆகும். இப்படிப்பட்ட கிறிஸ்தவ மருத்துவரகளின் **குடும்பத்திலா** இந்த **கொடூரம்.** ஏன் என கட்டுரையை எழுதுகிற என் மனதில் கேள்விகள் எழும்புகின்றன. இவ்வளவு கொடூர கொலையை செய்தவனின் முகத்தில் எந்தவித பதட்டமும் **துக்கமும்** நான் காணவில்லை. **இவன் ஒரு சைக்கோவும்** அல்ல, அதாவது அவன் மனநோயாளியும் அல்ல என்று மருத்துவரின் ரிப்போர்ட் கூறுகிறது. தெளிவாகவே அவன் போலீஸில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான். அவன் வாக்குமூலத்தில் கூறியதாவது நான் **சாத்தானை** கடந்த 10 **வருடமாக** ஆராதனை செய்து வருகிறேன். ஒருவனின் சரீரத்தில் இருந்து இரத்தத்தை வெளியேற்றினால் அதாவது பிசாசுக்கு பலி செலுத்தினால் அவர்கள் வேறு ஒரு ஆவி உலகம் போகலாம். ஆகவே என் பெற்றோரையும், என் கூட பிறந்த சகோதரியை **வேறு ஒரு உலகத்திற்கு** அனுப்பவே இப்படி செய்தேன் என கூறியிருக்கிறான்.

ஜீன்சன் வீட்டிலும், வெளியிலும் யாரிடமும் பேசுவதில்லை. ஆஸ்ட்ரேலியாவிலிருந்து விடுமுறையில் இந்தியா வந்த அவனுக்கு நண்பர் யாரும் இல்லை. அவன் தன் வீட்டைவிட்டு வெளியேயும் செல்வதில்லை. வீட்டோடு அடைந்து கிடப்பான். எப்போதும் **கருப்பு** உடையோடும் எப்போதும் **இன்டர்நெட்டும் Fபோனுமாகத்தான்** இருப்பானாம். ஒருவருக்கு **இயர்போன் வயர் காதுகளில்** எந்நேரமும் தொங்குவது **ஆபத்தான விளைவுகளை** ஏற்படுத்தும் என்பதை எழுகிற நான் அறிந்திருக்கிறேன். இவைகளை நான் எழுதும்போது என் சிந்தனை இவ்வாறாகதான் போகிறது.

☐ வகுப்பறையில் மாணவர்களின் பார்வையை வைத்து (Face Reading) அனைத்தையும் அறியும் ஞானம் உள்ள ஒரு பேராசிரியர் தன் ஒரே மகன் 10 வருடமாய் **சாத்தானை** ஆராதிப்பதை அறியாமல் போனது எப்படி? மனோதத்துவம் படித்த தலைமை மனோதத்துவம் படித்த டாக்டரான அவனின் தாயக்கு தன் மகனின் நடவடிக்கைகளின் மாற்றங்களை வைத்து அவன் ஏதோ ஒன்றில் அடிமைப்ட்டு கிடக்கிறான் என்று அறியாமல் போனது எப்படி ?

பரீட்சை எழுதும் மாணவர்களின் **ஆடைக்குள்ளாக** மறைத்துவைத்திருக்கும் **பிட்டை கூட** மிக துல்லியமாக அறியும் இந்த பேராசிரியர் தன் மகன் **இன்டர்நெட்** வாயிலாக கோடாரியை ஆர்டர் செய்து பார்சலில் வாங்கியதை அறியாமல் இருந்தது ஏப்படி? வீட்டில் உள்ள யாருக்கும் அதைக் குறித்து சந்தேகம் வரவில்லையா? என்ன விந்தை இது ?

பெற்றோர் இருவரும் கல்லூரியில், ஆஸ்பத்திரியில் மற்றவர்களுக்கு (ஆலோசனை) **கவுன்சிலிங்** கொடுப்பவராக இருந்தும் மகனின் **மன நிலையை** உணராமல் போனது ஏன்?மகன் கூறுகின்றான் என் குடும்பத்தை **சாத்தானுக்காக கொன்றேன் என்று.** ஆனால் இது உண்மையாகத்தான் இருக்கும் என்கிறேன்! அல்லாமல் இருந்திருந்தால் ஒருவரை இவன்

கொல்லும்போதே **இன்னொருவர் தப்பியிருக்கலாமே**! குடியிருப்புகள் மிகுந்த பகுதியில் வீட்டில் உள்ள **4 பேரை** தனி ஒருவனால் கோடாரியால் துண்டு துண்டாக வெட்டிக் கொல்வது அவ்வளவு சுலபமானது அல்ல. கண்பார்வை மங்கிய நிலையில் வயதான உறவினரான ஒரு பாட்டி வீட்டில் உண்டு, அவரையும் விடவில்லை, அவளையும் வெட்டி கொன்றிருக்கிறான்.

இங்கே இப்போது என் மனத்திரையில் கல்லூரியில் நடந்த பழைய சம்பவம் ஞாபகத்தில் வருகின்றது அது என்னவென்றால், கல்லூரியில் **மாணவர் போராட்டம் நடக்கும்போது** மாணவர்கள் யாரும் கூட்டமாக சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி இந்த பேராசிரியரை **எதிர்த்து பேச முடியாது.** அப்படியிருக்க தனி ஒருவனாய் **பேராசிரியரை** இவன் எப்படி கொல்ல முடியும்? மகன் ஆராதித்த **பிசாசுதான்** இவ்வளவு கொடூரமான வழியில் இந்த பையனுக்கு உதவியிருக்கிறான் என்பது உறுதியாகிறது.

பின்னும் கேள்விகள் பையனைப்பற்றி எனக்குள் எழும்புகின்றது. மகன் வளர்ந்துவிட்டான். இனி அவன் வழிக்கே விட்டுவிடுவோம் என்றாவது ஒருநாள் தானே திரும்பி வருவான் என்று பெற்றோர் எண்ணியிருக்கலாம். ஆனால் மகனோ **கோடாரியோடு** அல்லவா வந்தான். இதை வாசிக்கிற நமக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். **வீட்டிலேயே** முடங்கியிருக்கிற எந்த ஒரு மகனோ, மகளோ மரியாதைக்காரர்கள் அல்ல. ஒழுங்கானவர்களும் அல்ல. அவர்கள் **நார்மல்** அல்ல என்பதை மனதில்கொள்ள வேண்டும்.

அவன் யாராலோ முடக்கப்பட்டு அடிமைப்பட்டு கிடக்கிறான். ஒரு நாள் முழுபெலத்துடன் **சாத்தான்** அவனை எழுப்பப்பண்ணுவான். கண்ணாபின்னா என்று **மந்திரவாதிபோல்** தலை முடிவளர்த்திய தன் மகனை பேராசிரியரான அவன் தகப்பன் ஏன் அவனை விசாரிக்கவில்லை? ஏன் கண்டிக்கவில்லை? நான் அதே கல்லூரியில் படித்துகொண்டிருந்தபோது இதே புரொபசர் கல்லூரியில் முடிவெட்டாமல் வருபவருக்கு கடுமையான **தண்டனை** கொடுத்து **தானே அந்த மாணவனுக்கு காசு கொடுத்தனுப்பி** முடி வெட்ட செய்யும் இதே கண்டிப்புக்கு பேர்போன இந்த பேராசிரியர் **தன் மகன் தலை முடியில் கொண்டை கட்டகூடிய** அளவு முடி வளர்த்தியதை கண்ட போது அவனை முடி வெட்ட வைக்காததது ஏன்? குறிப்பாக இப்படிப்பட்ட மாணவர்கள் குளிக்கவும் மாட்டார்கள். இது ஒரு முக்கிய அடையாளமாகும்.

**பிள்ளையை நடத்த வேண்டிய** வயதில், நடத்தவேண்டிய **வழியில்,** ஆரம்பத்திலேயே அவனை நீங்கள் நடத்தி அவர்களை வளர்க்காவிட்டால் மகனின் கையில் இருந்த **கோடாலிக்கு** முன்பு புரொபசரின் **பெலனும், பணமும்** பயன்படாது போனது போல் நடைபெறும்.

**அந்த பேராசிரியரை** நான் ஒரு நாள் தற்செயலாய் நேரில் பார்த்தபோது, அவர் என்னை பார்த்து **இப்போது என்ன செய்கிறாய்?** என்றார். இதை எழுகிற நான் **கிறிஸ்தவ ஊழியம்** செய்கிறேன் என்றேன். உடனே அவர் **ஊழியம் என்று கூறி.** உன் இளம் வயது வாழ்க்கையை **பாழாக்கிவிடாதே** என ஆலோசனை கூறி சென்றார் என்றால் அவரின் கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்க்கையின் வேதனைக்குரிய நிலையை நாம் அறியலாம். ஆனால் நானோ எனது **வாலிப காலத்திலேயே** என் ஆண்டவருக்காகவும் **சுவிசேஷத்திற்காகவும்** ஓடி முடித்ததில் சந்தோஷப்படுகிறேன். என் சரீரம் ஓய்வு பெரும் நிலையில் நான் ஊழியத்துக்கு

ஒப்புக்கொடுக்காததை நினைத்து பெருமைப்படுகிறேன். புரோபஸரின் தவறான ஆலோசனையின்படி என் வாலிப நாட்களை நான் பாழாக்கவில்லை. அதற்காக தேவனை துதிக்கிறேன்.

▣ 12 வயதில் வேத பண்டிதற்களோடு தர்க்கம் பண்ணக்கூடிய அளவிற்கு இயேசு வேத வசனத்தில் சிறு வயதிலேயே தேறினவராக இருந்தார்.

▣ உங்கள் பிள்ளைகளுக்கு முதலாவது தேவனுடைய ராஜ்யத்துக்கு உரியவைகளை கொடுங்கள்.

▣ யோபுவின் பிள்ளைகள் சிரித்து மகிழ்ந்து விருந்து நேரத்ததை கழித்தார்கள் அப்போது யோபு தமது பிள்ளைகள் பாவம் செய்திருப்பார்களோ என்று பயந்து யோபு **தன் பிள்ளைளுக்காக பாவத்திற்கான** பாவ நிவாரணபலி செலுத்தினான். இதன்மூலம் பிள்ளைகளுடைய பரிசுத்த வாழ்வை குறித்து **யோபு** மிகுந்த **எச்சரிக்கையாக** இருந்தான் என்று பார்க்கிறோமே !

▣ யாக்கோபின் வாலிப வயது குமார்த்தி **தீனாள்** தேசத்தை தனியாக சுற்றிப்பார்க்க அவள் அதிக சுதந்திரமாக தன் இச்சையின்படி ஜீவிக்க ஆசைபட்டவள். பெற்றோர் ஆலோசனையை அவள் மதிக்கவில்லை என்று தெரிகிறது. அந்த **சுதந்திரம்** காரணமாக அவள் தன்னையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த முடியாமல் போனாள் அவள் **பாவத்துக்குள்ளானாள்.** யாக்கோபின் குடும்பமே சோகத்தில் ஆழ்ந்தது. உங்கள் பிள்ளை **போகும் இடம்** அவன் வீடு திரும்பும் நேரம் அவர்கள், செய்யும் ஒவ்வொரு செயலையும் ஆரம்பத்திலேயே கவனிக்காமல் இருந்ததால் முழு குடும்பமே தத்தளிக்கும்.

சிலர் பிள்ளைகள் போக போக சரியாகிவிடுவார்கள் என்றும் காலம் அவனை திருத்தும் என்று நினைத்து ஏற்ற நாளில் அவன் திருந்துவான் என விட்டுவிட்டால் **உங்கள் நம்பிக்கை** வீணாய் போய்விடும். ஜாக்கிறதை !

▣ யுத்தத்திற்கு போன **சிசேராவை** இன்னும் காணவில்லையே! என தாய் **ஜன்னல் வழியாக பாரத்துக்கொண்டிருந்தாள்.** அதே சமயம் கூடார ஆணி சிசேராவின் நெற்றியில் ஊடுருவ அவன் தலையை உடைத்து அவன் மயங்கி விழுந்து மரித்தான். ஆனால் **அவன் தாயின்** கணவு வேறு. **மகனின் முடிவோ** வேறு. நியா 5:28 சிசேரா கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேல் மக்களை அழிக்க சிசேரா எதிரிகள் பக்கம் சேர்ந்து யுத்தம் செய்ததால் தேவ தண்டனை சிசேராவினமேல் வந்தது.

பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்த்துங்கள். **பிள்ளைகளை** ஆரம்பத்திலேயே **சிட்சிக்காவிட்டால்** அவர்கள் கர்த்தருக்கும் பெறறோருக்கும் **சத்துருக்களாக வளருவார்கள்.**

ஆடுகளாக வளர்த்தவேண்டிய உங்கள் **பிள்ளைகளை** பாசான் தேசத்து **எருதுகளைப்போல்** வளர்க்காதிருங்கள்.

தேவன் ஆரம்பத்தில் ஒருவனை **இரகசியமாக** சிட்சிப்பார். அந்த சிட்கையை புரிந்து திருந்தாவிட்டால் பின்பு **வெளிப்படையாக** சிட்சிப்பார். அந்த சிட்சையையும் அவன் அற்பமாக

எண்ணினால் அதன் பின்பு கர்த்தர் **அவனைவிட்டு** விலகுவார். கர்த்தர் ஒருவனை விட்டு விலகுவாரானால் அது மிகப்பெரிய சிட்டையயும் ஆபத்தும் ஆகும்.

## விடைத்தெரியாத கேள்விகள்

1. சுத்தத்திற்கு பெயர்போன **பேராசிரியரின் வீட்டிற்குள்** போலீஸ் புகுந்தபோது ஒரு லாரிக்குமேல் **குப்பை கிடந்ததாம் அது குவிந்து நாற்றம்** எடுப்பதை இந்த டாக்டர்கள் உணராமல் இருந்தது எப்படி?

2. **பெற்றோர் கவுன்சிலிங்** கொடுப்பதில் மிக திறமையானவராக இருந்தும் **மகனின் மன நிலையை** அறியாதிருந்தது எப்படி?

3. இவர்களின் குடும்பமும் பையனும் ஆராதனை ஜெபம் என்ற **ஆவிக்குரிய சூழ்நிலையிலிருந்து** இவ்வளவு **தூரத்தில் கொண்டுபோன சக்தி எது ?**

பேராசிரியர் டாக்டர் ராஜதங்கம் அவர்கள் கல்லூரி பணியில் இருக்கும்போது யாருக்கும் அஞ்சாத நேர்கொண்ட பார்வையுடையவர். **ஒழுக்கத்திற்கு** அதிக முக்கியத்துவம் கொடுப்பவராக திகழ்ந்தார்.

பேராசிரியர் Dr. **ராஜதங்கம்** அவர்கள் **தேவ சகாயம் பிள்ளையின்** இரட்சிப்பிற்கு காரணமாக இருந்த டச்சுப்படை **தளபதி டினாய்-**யின் வாழ்க்கையை ஆராய்ந்தவர். அவைகளை ஆராய்ச்சி செய்து ஆராய்ந்து அன்று **ஆல்-இந்தியா. ரேடியோ** வில் அவரைப்பற்றி பேசி பிரபலமானவர். 1994ல் மார்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரி வருட இதழில் ஏதாவது இவரின் விவரம் கிடைக்குமா என்று புரட்டும்போது அதில் ஒரு கவிதை என்னை சிந்திக்க வைத்தது.

இவர்கள் இந்தியர்கள்
தலையை இழந்தபின் தலைப்பாகை தேடுபவர்கள்
கண்களை இழந்தபின் ஒளியை தேடுபவர்கள்
கால்களை இழந்த பின் காலணி தேடுபவர்கள
நாவினை இழந்தபின் நாவன்மை தேடுபவர்கள்
கைகளை இழந்தபின் கைத்தடி தேடுபவர்கள்
இவர்கள் இந்தியர்கள்
இழந்தவற்றிக்கும் அணி தேடும் இவர்கள் இந்தியர்கள்.

அர்த்தம் பொதிந்த கவிதையை இயற்றியவர்
**அருள்தாஸ்.** எம்.ஏ.,
முதலாம்ஆண்டு வரலாறு துறை
(கன்னியாகுமரி மாவட்டம்) மார்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரி

## ஜாமக்காரன்

மேலே வாசித்த கொலை சம்பவம் அன்று புஷ்பராஜ் ஆகிய நான் திருவனந்தபுரத்தில் மலையாள மொழிபெயர்ப்புபை கம்ப்யூட்டரில் பதிவு செய்ய வந்திருந்தேன். ஜாமக்காரன் பத்திரிகையின் மலையாள மொழிபெயர்பை முடித்து சேலம் வந்து சேர்ந்தேன். சேலம் வந்த உடன் திருவனந்தபுரத்திலிருந்து இந்த கொடூர கொலை செய்தியை தொலைபேசி வழியாக அறிந்து அதிர்ச்சியடைந்தேன். காரணம் இந்த குடும்பத்தை குறிப்பாக Dr. **ஜீன் பத்மா** அவர்களை நான் அறிவேன். இவர்கள் திருவனந்தபுரத்தில் உள் Christ Church கிறிஸ்துநாதர் ஆலயத்தின் அங்கத்தினர்கள் ஆகும். சொந்த ஊரான நாகர்கோவிலிருந்து தொழில் காரணமாக திருவனந்தபுரத்தில் பிரம்மாண்டமான வீட்டை கட்டி நிரந்தரமாக குடியேறினார்கள். பெயர் கிறிஸ்தவர்களாக ஞாயிறுகாலை ஆங்கில ஆராதனைக்கு எப்போதாவது வந்து போவார்கள். ஆலயத்துக்கு வந்தாலும் இவர்கள் யாருடனும் பேசாது, பழகாது வீட்டுக்கு திரும்புவார்கள். ஆரம்ப நாட்களில் டாக்டர் ஜீன்பத்மா அவர்கள் சபை நடவடிக்கையிலும், ஞாயிறு பள்ளியிலும் தன்னுடைய பங்களிப்பை நல்லவிதத்தில் கொடுத்தவர் ஆகும். அதன் பிறகு தேவனுக்கும் இவர்களுக்கும் இடைவெளி எப்படி உண்டானது?

ஒரே ஒருமுறை திருவனந்தபுரம் **CSI டையோசிஸ் கன்வென்ஷனில்** M.M.சர்ச் மைதானத்தில் நான் பேசியபோது இப்போது சீனாவில் டாக்டர் படிப்பை முடித்த தன் மகளை அன்று அவள் மிகவும் சிறுமியாக இருந்தபோது ஜெபிக்க அவளை என்னிடத்தில் அழைத்து வந்தார்கள். அந்த சந்திப்புதான் முதலும் கடைசியுமாகும்.

கர்த்தர் **வீட்டை** (LIFE) கட்டாராகில் அதை கட்டுகிறவர்கள் பியாசம் விருதா, கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலர்கள் விழித்திருக்கிறது விருதா. சங் 127:1,2

இந்த கொலை சம்பவத்தை கேள்விபட்டபோது நானே ஜாமகாரனில் பெற்றோர்களுக்கு ஆலோசனை கட்டுரை எழுத விரும்பினேன். கொலை செய்யப்பட்ட பேராசிரியரிடம் பயின்ற மாணவனாக M.A.,படித்துமுடித்து இப்போது பெந்தேகோஸ்தே சபையின் பாஸ்டராக இருக்கிறார். கல்லூரி பேராசிரியர் அவர்களைப்பற்றியும் கொலையைப்பற்றியும் மிக அருமையான ஆலோசனையோடுள்ள கட்டுரையை **ஓசன்னா முழக்கம் என்ற** பத்திரிகையில் அவர் எழுதியதை நான் வாசித்தேன். அதை அவர் அனுமதியுடன் வாசகர்களுக்கு பிரயோஜமாக இருக்க இப்போது வெளியிடுகிறேன். எழுதியவருக்கு நன்றி. வெளியிட்ட பத்திரிக்கைக்கும் நன்றி.

மார்தாண்டம் கல்லூரியின் பேராசிரியர் அவர்களிடம் பயின்ற மாணவனாகிய எனக்கு மேலும் மேலும் கேள்விகள் எழும்புகின்றன. விலையுயர்ந்த **கம்ப்யூட்டர்** செல்போன் மகனுக்கு வாங்கிக்கொடுத்த பேராசிரியர் ஒரு **வேதாகமமோ** ஆவிக்குரிய **புத்தகங்களோ** வாங்கி கொடுத்திருப்பாரா? ஒரு நாளாவது **வாலிபர் கருத்தரங்கங்களில்** மகனை கொண்டுபோய் உற்சாகப்படுத்தியிருப்பாரா?

தினமும் வேதம் வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொடுத்திருப்பாரா? மிஷனரி களங்களில் மகனையும் அழைத்து சென்று அழியும் ஆத்துமாவை குறித்து அவனுக்கு காண்பித்து பணம் பெருத்த பேராசிரியர் குடும்பத்தினர் ஒரு மிஷனரியையாவது குடும்பமாய் தாங்கியிருப்பாரா? **அரண்மனை** போன்ற அவர் வீட்டில் ஜெபிக்க என்று **ஜெப அறை** ஒன்றை வைத்திருப்பாரா? **கஷ்டம், நஷ்டம், குடும்பம்** அகிய இவைகளைப்பற்றி தன் மகனுக்கு. மகளுக்கு ஆலோசனையாக கூறி கவுன்சிலிங் கொடுத்திருப்பாரா ? ஆலோசனை கொடுத்திருக்க மாட்டார் என்று யூகிக்க முடிகிறது.

ஆவிக்குரிய கிறிஸ்தவனுக்கு **தேவ கிருபை** இல்லாமல் ஒன்றுமில்லை, **தேவ பாதுகாப்பு** இல்லாமல் **ஒரு பாதுகாப்பும்** இல்லை ! இல்லைவே இல்லை !

மிஷனரிகளின் இரத்தத்தில் கட்டப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் மார்தாண்டம் **கல்லூரியில்** வேலை பார்த்த இவரோ இவர் மனைவியோ **ஒரு மிஷனரியையாவது** தாங்க முற்பட்டார்களா? அப்படி செய்திருந்திருந்தால் அந்த மிஷனரிகளுடைய ஜெபமாவது இவர்களுக்கு உதவியிருக்குமே !

இதை வாசிக்கிற நீங்கள் பிள்ளையை நடத்தவேண்டிய வழியில் நடத்துங்கள்.

## எச்சரிக்கை ! ஆலோசனை !

**இணைய தளம்** என்பது **சாத்தானின் வழி ஆகும். அது அவனுடைய** திட்டம் ஆகும். அதற்குள் புகுந்துவிட்டால் **வெளியே வருவது** கடினமே !

**பிள்ளைகளை** திருத்தி நடத்தவேண்டிய வயது 3 முதல் 12 வரைதான் **அதன்பின்பு** பிரயோஜனமில்லை.

பழைய ஏற்பாட்டில் உலக அரம்பத்தில் அன்றைய உலகமே பாவத்துக்குள்கிடந்து **தேவ கோபத்திற்கும்.** தண்டனைக்கும் ஆயத்தமாகிகொண்டிருந்தபோது. **நோவா** உத்தமனும் நீதிமான்களுமாய் இருந்தார்களே (ஆதி 6:9)

உலக மக்கள் அத்தனை பேரும் அன்று அழிந்தார்கள். ஆனால் நோவாவின் குடும்பம், பிள்ளைகள் மூன்று **மருமகள்கள் ஆகியவர்கள் மட்டும்** பேழைக்குள் சென்று காப்பாற்றப்படும் அளவு அவர்கள் குடும்பமாய் சாட்சியுடனும் **தெய்வ பயம்** உள்ளவர்களாகவும் அவர்கள் வளர்த்தியதினால்தானே குடும்பமாக அந்த பேழைக்குள் பிரவேசிக்க முடிந்தது. அப்படிப்பட்ட பாக்கியம் இதை வாசிக்கிற உங்கள் குடும்பத்துக்கு கிடைக்குமா?

உங்கள் பிள்ளைகள் டாக்டர், இன்ஜினியர், உயர் அதிகாரிகளாக இருப்பதைவிட என் பிள்ளைகள் **சத்தியத்தில் நடக்கிறார்கள்** என்றுள்ள சந்தோஷத்தைவிட வேறு சந்தோஷமே இவ்வுலகில் இல்லை. (3 யோவா 1:4)

# KARNATAKA CENTRAL DIOCESE - CSI
## St.MATHEW'S CHURCH- ROBERTSONPET(KGF)
## கூட்டங்கள்









KGF டிஸ்ட்ரிக் கன்வென்ஷன் **தோப்பு திருவிழா** என்ற பெயரில் அனைத்து சிஎஸ்ஐ சபைகளும் இணைந்து கூடும் ஐக்கிய ஆவிக்குரிய கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

திருநெல்வேலி CSI திருமண்டலத்தில் **மாம்பழ பண்டிகை** என்று தாமிரபரணி ஆற்றுகரையில் மிஷனரிகாலத்திலிருந்தே அனைத்து ஊர்களிலிருந்தும் மாட்டு வண்டியில் சமையல் பாத்திரத்தோடு வந்து தங்கி சமைத்து ஆவிக்குரிய கூட்டங்களில் பங்குக்கொண்டு திரும்புவார்கள். அதேபோல் **KGF**ல் கோரமண்டல் ரயில் நிலையம் அருகே அந்த காலத்தில் தோப்பு மரங்கள் நிறைந்த அந்த பெரும் மைதானத்தில் அந்த மாவட்ட CSI சபைகள் அறுப்பின் பண்டிகையுடன் இப்படிப்பட்ட கூட்டங்களையும் ஏராளமான பொருள்செலவில் அலங்கரிக்கப்பட்ட தகர பந்தலில் நடத்துவார்கள். நல்ல விருந்தும் ஏற்பாடு செய்து தங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்தி இக்கூட்டங்களை நடத்துவார்கள்.

St.Mathew's CSI சபையினர் Rev.N.Usha Rani,BA.,BD.,அவர்கள் தலைமையில் சபை பொருப்பாளர்கள் இம்முறை என்னை அழைத்து செய்திகளை பகிர்ந்துக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. அனைத்து CSI ஆயர்களும் இக்கூட்டங்களில் கலந்துக்கொண்டனர்.

# இந்து தெய்வங்களின் படங்கள் பள்ளி பிள்ளைகளின் பாடப்புத்தகங்களில்

இந்து தெங்வங்களைப்பற்றியும் அவைகளின் கட்டுக்கதைகளைப்பற்றியும் சிறு பிள்ளைகளின் பாட புத்தகத்தில் இப்போது படங்களுடன் தமிழ்நாட்டிலும் வெளிவந்துவிட்டது. பாட புத்தகத்தின் அட்டை படமே இந்து விக்கிரக படம் இடம் பெற்றுள்ளது. முந்தைய ஜென்மம் - மறு ஜென்மம் இப்படி மனிதன் மரித்தால் பல ஜென்மங்கள் உண்டு என்று இந்து மதகொள்கையை வெளியறங்கமாக சிறு பிள்ளைகளின் மனதில் விதைக்க தொடங்கிவிட்டார்கள். பிள்ளைகள் ஆசிரியையிடம் அடுத்த ஜென்மம் என்றால் என்ன?. மரித்தபின் அடுத்த ஜென்மம் என்று உண்டா? என்று கேள்வி கேட்கிறார்கள். ஆசிரியைகளுக்கு விளக்க அறிவு இல்லை. அனுமதியும் இல்லை.

ஆனால் கிறிஸ்தவ ஆசிரியை ஆசிரியர்கள் இதைக்குறித்து பிள்ளைகளுக்கு மறைமுகமாக சரியாக விளக்கத்தை கூறி முப்பத்துமுக்கோடி தேவர்கள் என்பது இந்துக்களின் கற்பனை தெய்வங்கள். அவர்கள் அதை நம்புகிறார்கள். ஆதுவே அவர்களுடைய சுதந்திரம். ஆனால் அதை நாம் நம்பகூடாது என்பதை ஞானத்தோடு, பிரச்சனை உருவாகாமல் தெரிவிக்கவேண்டும். அதே சமயம் இயேசுதான் தெய்வம் என்று வெளிப்படையாக பிள்ளைகளிடம் கூறவும் கூடாது. மத பிரச்சாரம் என்ற குற்றச்சாட்டு உங்கள்மேல் வரும். நீங்கள் கர்த்தரிடமிருந்து ஞானத்தை கேட்டு பெற்று பிள்ளைகளுக்கு போதியுங்கள் . அதே சமயம் மற்ற எந்த தெய்வங்களையும் பிசாசு என்று வர்ணித்து இழிவுபடுத்தவும் கூடாது. ஆசிரியர்கள், ஆசிரியைகள் இந்த விஷயத்தில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுங்கள்.

**நன்றி**

வங்கிமூலமாகவும் மூலமாகவும் வழியாகவும் காசோலை டிராப்ட் மூலமாகவும் காணிக்கை அனுப்பி இந்த ஊழியம் தொடர ஜெபத்துடன் உதவியர்கள் அத்தனை விசுவாசிகளுக்கும் என் சார்பாகவும், காணிக்கை அனுப்ப இயலாத ஜாமக்காரன் வாசகர்கள் அனைவரின் சார்பாகவும் உங்களுக்கு நாங்கள் குடும்பமாக நன்றி கூறுகிறோம். தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**வங்கி வழியாக வரும் காணிக்கை (ONLINE OFFERINGS)**

Online மூலமாக Bank வழியாகவும் எனக்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் எண்ணிக்கை பெருகி கொண்டிருக்கிறது. தேவனை துதிக்கிறேன். அப்படி Online ல் அனுப்புபவர்கள் email வழியாக அல்லது தொலைபேசி வழியாக அனுப்பும் காணிக்கை ரூபாய் விவரங்களையும் எந்த வங்கிக்கி அனுப்பீனீர்கள் என்பதையும் உங்கள் தொலைபேசி எண்ணையும் தனியாக நீங்கள் குறித்துவைத்து தொலைபேசி வழியாகவே உங்களுக்கு காணிக்கை சேர்ந்த விவரத்தை உடனே அறிவித்துவிடுகிறேன். இது காணிக்கை வரவை கணக்கு வைப்பதற்கும், ஆடிட்டருக்கு சமர்பிப்பதற்கும் வசதியாக இருக்கிறது. இதுவரை Online னில் காணிக்கை அனுப்பியவர்கள் தங்கள் விலாசத்தை அனுப்பாதவர்கள் தயவுசெய்து ஒருமுறை தொலைபேசியுடன் உங்கள் விலாசத்தை அனுப்பிவிட்டால்போதும், அதை குறித்து வைத்து நீங்கள் காணிக்கை அனுப்பும்போதெல்லாம் email மூலம, தொலைபேசி மூலம் பணம் அனுப்பிய செய்தி எனக்கு அறிவித்தால் போதும் உங்கள் விலாசத்துக்கு நேராக பண வரவை குறித்து பதிலும் அனுப்ப உதவியாய் இருக்கும்.

# 5 TRUTHS FOR FATHERS



*- Dr. Billi Graham*

***" Who is the man who fears the Lord? He will instruct him in the way he should choose."***

- Psalm 25:12 (NASB)

## 1. You can be a good father

Even if your dad wasn't good example or wasn't in the picture at all, you don't have to fear fatherhood. You have a Heavenly Father who will never fail you.

## 2. God wants you to honor your father

It might not be easy, but it is a mandate from God. The Bible says, '**Honor your father and your mother, as the Lord your God commanded you, that your days may be long, and that it may go well with you in the land that the Lord your God is giving you"**. (Deuteronomy 5:16)

## 3. Time is precious

Harboring resentment doesn't glorify God or serve in your best interest. None of us is guaranteed tomorrow, so fathers children--- make the most of whatever time you have today. Consider James 4:14, which says, **"Yet you do not know what tomorrow will bring. What is your life? For you are a mist that appears for a little time and then vanishes".**

## 4. Be patient and loving


Find your strength and peace in God. Only Christ can meet the deepest needs of our world and our hearts. Christ alone can bring lasting peace.

## 5. Prayer is powerful

Pray for your family, your children, your children's children (even if they aren't here yet). Prayer is powerful and a great privilege for those who trust in the Lord.

*- Selected*

## வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!!



தூத்துக்குடி & நாசரேத் CSI திருமண்டலத்தின் இரண்டாவது பிஷப்பாக **Rt.Rev.S.E.C.DEVASAGAYAM**,MA.,B.D.,அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டடுள்ளார்.

ஆயராக இருந்தபோது சுகமளிக்கும் ஆராதனையை தமிழ்நாட்டில் முதன்முதலாக சிஎஸ்ஐ ஆலயத்தில் நடத்திய ஆயர் என்ற சிறப்பு இவருக்குண்டு.

இவருக்கு மனைவி,இரண்டு பிள்ளைகள் உண்டு. இவர் தூத்துக்குடி மாவட்டம் **மன்னாரயந்தட்டு** கிராமத்தை சேர்ந்தவர். திருமண்டலம் பிரிக்கப்படாத காலத்தில் திருநெல்வேலி திருமண்டலத்தின் பிஷப் சேப்ளின் ஆகவும், பிஷப் அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய நல்ல நிர்வாக அனுபவம் உள்ளவர். கர்த்தர்தாமே தூத்துக்குடி திருமண்டலத்தை இவர் காலத்தில் ஆவிக்குரிய திருமண்டலமாக மாற்றி பழைய பிரச்சனைகள்,ஊழல்கள் எதுவும் எழும்பாதபடி திருமண்டலம் சமாதானத்துடன் நடத்தப்பட கர்த்தர் அருள்புரிவாராக என்று என் சார்பிலும், ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் வாழ்த்துக்கள் கூறுகிறோம். பிஷப் ஐயா அவர்கள் **மில்லர்புரம்** சிஎஸ்ஐ ஆலயத்தில் ஆயராக பணியாற்றியபோது **என்னை அழைத்து** கன்வென்ஷன் நடத்தியவர் என்பதில் எனக்கு சந்தோஷம் உண்டு. பிஷப் ஐயாவுக்காக ஜெபிப்போம்.

**AUGUST 2017**

# Printed Book

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.